உ

# புதுச்சேரி அரசு
## இந்து சமய நிறுவனங்கள் துறை
## ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம்
## திருநள்ளாறு

எண்: நி.அ(கோ)/ஸ்ரீதசுதே/திரு/ப.சா-1/2024/ 659 தேதி:28.11.2024

## ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு

திருநள்ளாறு ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தான திருக்கோவிலின் தினசரி பூஜை பயன்பாட்டிற்கு கீழ்கண்ட விபரப்படி எவர்சில்வர் செம்படம் வழங்க நடப்பில் உள்ள Trade Licence மற்றும் GST சான்று பெற்ற வியாபார நிறுவனங்களிடருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| ஒப்பந்தபுள்ளி சமர்பிக்க கடைசி தேதி,நேரம் | : | 10.12.2024 மாலை 4.30 மணி |
| ஒப்பந்தபுள்ளி திறக்கப்படும் தேதி , நேரம் | : | 10.12.2024 மாலை 5.00 மணி |
| தேவைப்படும் பொருட்கள் மற்றும் அதன் விபரம் | : | எவர்சில்வர் செம்படம் |
| | | எடை - 200 கிராம் |
| | | உயரம் - 14 செ.மீ |
| | | சுற்றளவு - 42 செ.மீ |
| தேவைப்படும் பொருளின் உத்தேச எண்ணிக்கை | : | 5000 (ஐந்தாயிரம் மட்டும்) |

**ஒப்பந்தபுள்ளி நிபந்தனைகள்:**

1. ஒப்பந்தபுள்ளியில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் டேவணித்தொகையாக ஒப்பந்தபுள்ளியுடன் ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)-த்திற்கான வங்கி வரைவோலை, நிர்வாக அதிகாரி, ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம், திருநள்ளாறு என்ற பெயரில் எடுத்து இணைக்கப்படவேண்டும்.
2. நடப்பில் உள்ள Trade Licence நகல் மற்றும் GST சான்று இணைக்கப்படவேண்டும்.
3. டேவணித்தொகைக்கான வரைவோலை மற்றும் நடப்பில் உள்ள Trade Licence மற்றும் GST சான்று நகல் இணைக்கப்படாத ஒப்பந்தபுள்ளிகள் நிராகரிக்கப்படும்.
4. தரம், எடை மற்றும் செம்படத்தின் அளவை தேவஸ்தான அலுவலகத்திற்கு அலுவலக நேரத்தில் வந்து பார்த்து தெரிந்து கொள்ள வேண்டும்.
5. ஒப்பந்ததாரரே தங்கள் பொறுப்பு மற்றும் செலவில் தேவஸ்தான நிர்வாகம் கோரும் பொருட்களை அவ்வப்போது வழங்கப்படும் INDENT அடிப்படையில் தேவஸ்தான வளாகத்தில் வழங்க வேண்டும். பொருட்களை பாதுகாக்கவோ , பொருட்களை வைக்கவோ எந்தவித இடமும் கொடுக்கப்படமாட்டாது.
6. மேற்கண்ட பொருட்கள் தரமானதாகவும் கொடுக்கப்பட்ட அளவுகளில் உள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.
7. கொடுக்கப்படும் பொருட்களின் அளவு மற்றும் தரம் குறைந்து இருந்தால், பணி ஆணைக்கான உரிமம் ரத்து செய்யப்பட்டு, காப்பீட்டு தொகையான ரூ.5,000/-ஐ இழக்க நேரிடும்.

8. தேவஸ்தானத்தின் தேவைக்கு ஏற்ப 30% பொருட்கள் கூடுதலாக, தேவைப்படும் பட்சத்தில் அதை கொடுப்பதற்கு தயாராக இருத்தல் வேண்டும். குறைவாக பொருட்கள் வாங்கும் பட்சத்தில் எவ்வித நஷ்டஈடும் வழங்கப்படமாட்டாது.
9. இக்கோவிலுக்கு எவ்வப்போது மேற்கண்ட பொருட்கள் தேவைப்படுகின்றதோ அவ்வப்போதெல்லாம் தடையில்லாமல் உடனுக்குடன் வழங்கிடல் வேண்டும்.
10. பெறப்பட்ட விலை புள்ளிகளில் எந்தெந்த ஒப்பந்ததாரர் குறைந்த விலை குறிப்பிட்டுள்ளாரோ பொருட்களை அந்த ஒப்பந்ததாரர் வழங்கிட ஆணை வழங்கப்படும்.
11. மேற்குறிப்பிட்ட அளவுடைய மாதிரி எவர்சில்வர் செம்படத்தினை அலுவலக நேரத்தில் நேரில் வந்து பார்த்து செல்லலாம்.
12. ஒப்பந்ததாரர் மேற்படி ஒப்பந்தகாலத்தில் ஏற்படும் எவ்வித இயற்கை இடர்பாடுகள் மற்றும் அரசு அறிவிக்கும் ஊரடங்கு போன்ற நடைமுறையால் ஏற்படும் நஷ்டத்திற்கு தேவஸ்தானம் பொறுப்பேற்காது. எந்த வித இழப்பீட்டு தொகையும் கோரமுடியாது மற்றும் எவ்வித ஒப்பந்தகால நீடிப்பும் வழங்கப்படமாட்டாது.
13. ஒப்பந்தபுள்ளிகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ அல்லது ஒப்பந்தபுள்ளியை ஒத்திவைக்கவோ ஆலய நிர்வாக அதிகாரிக்கு முழு உரிமையுண்டு. அவரின் தீர்ப்பே இறுதியானது.

(signed) 28/11/2024

நிர்வாக அதிகாரி

1.Notice Board
(As per list enclosed)
2.Thirunallar Temple Website
(www.thirunallarutemple.org)